அரும்பணி ஆற்றும் கல்விச்சாலைகள்

யாழ்.நகரில் கல்விப் பணியில் நூற்றிநாற்பதாவது ஆண்டை நிறைவு செய்து - அர்ப்பணிப்புடன் தொடரும்

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்-(J/H.F.C)

27 யாழ்.தினக்குரலின் கல்விப்பணி

அதிபரின் உள்ளத்திலிருந்து

1862ம் ஆண்டில் கத்தோலிக்கப் பெண்களுக்கான முதல் ஆங்கில பாடசாலையகத்திருக்குடும்ப சபையின் ஐரோப்பிய பெண் துறவியரினால் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை ஆளுமை மிக்க மாணவர்களை, நற்பிரஜைகளை உருவாக்கிச் சமுதாயத்திற்கு அளித்தமையால் இலங்கையிலேயே முதன்மை பெற்று நிற்கும் வரலாற்றைக் கொண்டுள்ளது.

1976ல் அரசு கையேற்கும் வரையில், பாடசாலையின் பாரம்பரியங்களுக்கேற்ப, எதுவும் குறைவு படாதவகையில் தொடர்ந்தும் எமது சுதேச அதிபர்கள் தலைமையேற்றுச் செயற்படுவதற்கு உருவாக்கமும், உந்துதலும் அளித்துதவிய ஐரோப்பிய துறவியர்களையும் அவர்களுக்குப் பக்கபலமாக நின்ற ஆசிரிய மணிகளையும் இந்நன்னாளில் நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

1980களை அடுத்து நமது நாட்டில் ஏற்பட்ட அரசியற் சூழல்கள், யுத்த அனர்த்தங்களால் பாதிப்படைந்த மாணவர்களின் நடத்தைக் கோலங்கள், வரலாற்றில் நாம் வளர்த்தெடுத்த, கட்டிக் காத்த எமது பாடசாலைக்கே சிறப்பான பாரம்பரியங்களைத் தொடர்ந்தும் பேணிக்காப்பதற்குச் சவாலாக அமைந்த வேளையிலும், அதற்கு அஞ்சா நெஞ்சத்துடன் முகங்கொடுத்துச் செயலாற்றிய காலங்கள் மறக்க முடியாதவை. 2002 ம் ஆண்டில் இதுவரை யாழ்.கன்னியர் மடம் ம.வி ஆக இயங்கிவந்த எமது அயற்பாடசாலையும் எமது பாடசாலையுடன் இணைக்கப்பட்டது. இதனால் அதிகரித்த மாணவர் எண்ணிக்கை, பௌதிக,ஆளணிப்பற்றாக்குறை, போர்ச்சூழலினாற் பாதிக்கப்பட்ட குடும்பப் பின்னணியைக் கொண்ட மாணவர்கள், இவை போன்ற இன்னும் பலகாரணிகளால் இச்சவால்கள் மேலும் அதிகரித்த நிலை காணப்படுகிறது. இச்சவால்கள் எதிர் நோக்கப்பட வேண்டியவை, முறியடிக்கப்படவேண்டியவை. இதற்கு ஆசிரியர்கள் மாணவர்கள்,பெற்றோர், உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் வதியும் பழைய மாணவர்கள்,நலன்விரும்பிகள் அனைவரும் பாடசாலை அதிபருடன் தோளோடு தோள்நின்று உழைத்து பாடசாலையின் பாரம்பரியத்தைப் பாதுகாக்க, அதை உருவாக்கியவர்களின் இலட்சியக் கனவு களை நனவாக்க உறுதி பூண்டு செயலாற்ற வேண்டுமென்று இந்த நல்ல நாளிலே கேட்டு நிற்கிறேன்.

அருட்சகோதரி.ஜோலண்ட்

மாணவர் கல்வி அடைவுகள்

க.பொ.த.உயர்தரம்

ஆண்டு	தோற்றியோர்	சித்தி அடைந்தோர்	பல்கலைக் கழக அனுமதி
1995	90	80	06
1996	59	52	13
1997	79	66	14
1998	83	80	16
1999	89	85	20
2000	91	71	19
2001	86	70	17
2002	177	121	20
2003	179	114	-

க.பொ.த.சாதாரணதரம்

ஆண்டு	தோற்றியோர்	சித்தி அடைந்தோர்
1995	91	76
1996	81	52
1997	84	71
1998	94	67
1999	86	65
2000	83	68
2001	77	62
2002	177	121

பழைய மாணவர் சங்க செயற்குழு 2003-2004

ஆசிரியர் குழாம்

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழு- 2003-2004

தலைமைத்துவ மாணவர் குழுவும் பொறுப்பாசிரியர்களும்-2004

பாடசாலையின் மகுட வாசகம்

“இறைவனுக்கே மகிமை”

‘Glory to God Alone’



பாடசாலையின் சின்னம் (CREST)

அரைவட்டச் சூரியன் - புதுமையான கதாபாத்திரம்
சிவப்புக் கேடயம் - விசுவாசம், பரிசுத்தம்
மூன்று இதழ்கள் - திருக்குடும்பம் (யேசு,மரி,சூசை)
1.நீலம் - யேசு - அருகு தலைமைத்துவம்
2.வெள்ளை - மரியாள் - ஏற்றுக்கொள்ளத்தக்க பிரமாணம்
3.அதா - சூசை - தாழ்ச்சி, பிரயாசம்
ஒலிவ் கிளைகள் - சமாதானம்

ஆசிச் செய்தி

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் தனது 140ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் இத்தருணத்தில் அதற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

இலங்கையில் நிலவிய ஆங்கிலேய காலத்துக் கல்விப் பாரம்பரியத்தினோடு கத்தோலிக்க மறைபரப்பாளர்களின் அயராத உழைப்பினால் இக் கல்லூரி யாழ் மண்ணில் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு இன்று ஒரு பெரும் விருட்சமாக விளங்குகின்றது.

யாழ் கத்தோலிக்க பெண்களின் கல்வி மேம்பாட்டிற்காக இக்கல்விச்சாலை ஏறத்தாழ 140 வருடங்களாகப் பணியாற்றி வருகின்றது. இக்கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை காட்டி, அரும்பாடுபட்டு உழைத்த திருக்குடும்பக் கன்னியர்கள், விசேடவிதமாக அயர்லாந்து நாட்டுத் திருக்குடும்பக் கன்னியர்கள், ஆசிரியப் பெருமக்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். சிறப்பாக 140 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகளைக் கொண்டாடும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,பழைய மாணவர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும் நல்வாசிகளையும் கூறுகின்றேன்.

தொடர்ந்து வரும் நவீன யுகத்திலும் இக் கல்லூரி வளரவேண்டும், அதன் பணிகள் சிறக்க வேண்டும், நல்லொழுக்கத்தையும், மானிடநேயத்தையும், கிறிஸ்தவ விழுமியங்களையும் சிறந்த ஆளுமையுள்ள எதிர்கால சந்ததியை உருவாக்க வேண்டுமென இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
அதிபர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

பாடசாலையின் வரலாற்றுப் பாதை

யாழ்ப்பாணக் கத்தோலிக்கப் பெண் பிள்ளைகளின் ஆங்கிலக் கல்விக்கென ஒரு பாடசாலை வேண்டும் என்ற கோரிக்கையை வணக்கத்துக்குரிய கத்தோலிக்க ஆயர் பிட்டாச்சினி (Bettachini) ஏற்றுக் கொண்டனர். அதன் பேறாக 1862- இல் அயர்லாந்திலிருந்து திருக்குடும்பக் கன்னியர் ஐவர் வரவழைக்கப்பட்டு 24.05.1862 இல் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. திருக்குடும்பக் கன்னியர் சபை இலங்கையிற் கால்பதித்து நிறுவிய முதலாவது பாடசாலை இதுவாகும்.

1870- தற்போதைய பிரதான மண்டபமடங்கிய கட்டிடத் தொகுதி அமைக்கப்பட்டது.
1873- அரச அங்கீகாரம் பெற்றுப் பதிவு செய்யப்பட்டது.
1922- பாலர்பிரிவிலிருந்து லண்டன் மெற்றிக் குலேசன்வரை வகுப்புகள் விஸ்தரிக்கப்பட்டதன் பயனாக வடமாகாணத்திலிருந்து முதன் முதல் இரு மாணவிகள் லண்டன்மெற்றிக் குலேசன் பரீட்சையில் சித்தியடைந்தனர்.
1937- பெண்களுக்கான முதலாவது சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ்படைப்பிரிவு இங்கு ஆரம்பிக்கப்பட்டது.
1950- முதன்முறையாக விஞ்ஞானப் பிரிவு மாணவர் பல்கலைக்கழக அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றினர்.
1961- அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்றது.
1962- நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.
1970- முதலாவது சுதேச அதிபராக அருட் சகோதரி மாட்டினா பதவியேற்றார்.
1981- க.பொ.த உயர்தர வர்த்தகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.
1987- "வணிகத்தளிர்" சஞ்சிகை முதல் வெளியீடும் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நடைபெற்றன.
1988- தற்போதய அதிபர் அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் பதவி ஏற்றார்.
1995- மாபெரும் இடப்பெயர்வால் பாடசாலை ஆவணங்கள் அழிந்தன.
2000- பாடசாலை போர் அனர்த்தத்தால் புலம்பெயர்ந்து மானிப்பாயில் இயங்கியது.
2002- கன்னியர்மடம் மகாவித்தியாலயம் எமது பாடசாலையுடன் இணைக்கப்பட்டுத் திருக்குடும்ப கன்னியர்மடம் எனப் பெயரிடப்பட்டது.

பாடசாலை வளாகம்

யாழ் ஆயரின் வாழ்த்து

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம் தனது பணியினை ஆரம்பித்து 140ஆவது ஆண்டை நிறைவு செய்யும் வேளையில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1862ஆம் ஆண்டு இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது திருக்குடும்ப கன்னியர்களின் கல்விக் கூடமாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பெண்களுக்குக் கல்வி வழங்கவென வெளிநாட்டு மிஷனரிமாரால் அமைக்கப்பட்ட முதல் பாடசாலை என்பதும் குறிப்பிடத்தக்கது. மிக நீண்ட காலமாக அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த அருட்சகோதரிகளால் நிர்வகிக்கப்பட்டு வந்த இப்பாடசாலை ஆங்கில பாடசாலை,தமிழ் பாடசாலை என இரண்டாக இயங்கி வந்தாலும் 2002 ஆம் ஆண்டிலிருந்து ஒன்றிணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தனியார் பாடசாலையாக நிபந்தனையுடன் சுவீகரிக்கப்பட்டது. இப்போது இப்பாடசாலையைத் தேசிய பாடசாலையாக ஆக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதும் வரவேற்கத்தக்கது.

தமிழ் மக்கள் கல்வி மேல் பற்றுக் கொள்ளவும் அதனைத் தம் பாரம்பரிய சொத்தாக ஆக்கிக் கொள்ளவும், வழிசமைத்துத் தந்தவர்கள் திருக்குடும்ப கன்னியர் சபை மிஷனரிமார் ஆவர். அவர்களின் பணியைத் தொடர்ந்து கல்வியிலும்,கட்டுப்பாட்டிலும் சிறந்த ஒரு கல்விக்கூடமாக இதனை இன்று வரை இயக்கி வரும் இப்பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி எம்.யோலண்ட் அவர்களையும், ஆசிரியர்கள்,நிர்வாகிகளையும் இத்தருணத்தில் பாராட்டி வாழ்த்த விரும்புகிறோம்.

இவ் வேளையில் இப்பாடசாலையின் முதல் சுதேச அதிபராகப் பணியாற்றிய அருட்சகோதரி அன்ரனி யோசப் அவர்களின் பணிகளையும் நன்றியோடு நினைவு கூருகின்றோம்.தமிழ் மக்கள் மத்தியில் கல்வியின் நிலைப்பாடு பெரிதும் வீழ்ச்சியுற்றுப் போகும் நிலையில் தமது உறுதியான பணியால் திரும்பவும் அதனை நிலைப்படுத்தி வளர்க்க இவர்கள் உழைப்பார்கள் என்ற நம்பிக்கையோடு ஆசிகளைத் தெரிவிக்கிறோம்.

மேதகுதோமஸ்சவுந்தரநாயகம்ஆண்டகை
யாழ் ஆயர்

கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



திருக்குடும்பக் கன்னியர் மடம் கத்தோலிக்கத் திருச்சபையால் 1862ல் நிறுவப்பட்டு வெளிநாட்டு அருட்கன்னியரினதும், சுதேச கன்னியரினதும் அறிவாற்றல் மிக்க வழி நடத்துதலின் கீழ் ஒரு சிறப்பான பாரம்பரியத்தைக் கொண்டு,இன மத பேதமென்ற குறுகிய எல்லைகளைக் கடந்து,சமுதாயத்தின் எல்லாப் பகுதிகளையும் சார்ந்த மாணவிகளுக்குப் பல தலைமுறைகளாகப் பணியாற்றி வந்துள்ளது. இது மகத்தான ஒரு பணியாகும்.

பல்வகைப்பட்ட கலைத்திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றும் பணிக்குத் தம்மை அர்ப்பணித்த புகழ் பெற்ற பாடசாலை நிர்வாகிகள் வரிசையில் பாடசாலையின் தற்போதைய அதிபரான அருட்செல்வி யோலண்ட் அவர்களும் ஒருவராவார்.அண்மையில் அவர் ஓய்வு பெறப்போவது பாடசாலைச் சமூகத்திலுள்ள அனைவருக்கும் ஓர் இழப்பாகும்.

ஆயினும் இப்பாடசாலையிற் பணிபுரியும் ஆற்றலும் அர்ப்பண மனப்பான்மையும் கொண்ட ஆசிரியர் குழாம் அதன் வளமான பாரம்பரியத்தைப் பேணவும், தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் பாடசாலையைக் கொண்டு செல்லவும் துணைபுரிவார்கள் என்பதில் ஐயமில்லை.

பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன்,அதிபர் அருட்செல்வி யோலண்ட் அவர்களது சிறப்பான பணிக்கு இந்நிகழ்ச்சி ஒரு கொடுமுடியாக அமையுமென ஆசிக்கிறேன்.

பவிக்னேஸ்வரன்
யாழ்ப்பாணம்.

திருக்குடும்ப மாகாணத் தலைவியின் ஆசியுரை

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம், கல்லூரி தனது 140 வது அகவையைச் சிறப்பித்து விழாவெடுக்கும் இச்சந்தர்ப்பத்தில் அதன் அதிபர்,ஆசிரியர்கள், மாணவிகள் அனைவரையும் வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமிதம் அடைகின்றேன்.இந்தக் கல்விக் கூடத்தின் வாயிலாகக் கடந்து சென்ற அனைவர் மீதும் இறைவன் ஆற்றிய மாண்புமிக்க செயல்களுக்காக அவரைப் போற்றிப் புகழ்வதற்கு, இது அரியதோர் சந்தர்ப்பமாகும்.

1820 இல் 100 தமிழ் மாணவியருடனும்,12 ஆங்கில மாணவியருடனும் திருக்குடும்ப சபை சமேதராய் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று 1800 க்கு மேற்பட்ட மாணவிகளையும் 78 ஆசிரியர்களையும் கொண்டு விளங்குகின்றது.

அயர்லாந்து நாட்டுத் துறவியின் விசுவாசம், அர்ப்பணம், அன்பு, ஒழுக்காற்றல், தியாகம் என்பவற்றோடு விதைக்கப்பட்ட இச் சிறுவிதையானது, காலங்களினூடாக பல திருச்சபை துறவியர், ஆசிரியர் மாணவர்களாற் போதிக்கப்பட்டு இன்று பெரியதோர் விருட்சமாகிக் கனி கொடுத்துதவுகின்றது.140ஆண்டுகளாகஆற்றப்பட்ட அருஞ் சேவைகளையிட்டு மனப்பூரிப்பும்,பெருமையும் அடையும் இதே வேளையில் அவர்களின் அர்ப்பணம், மறை பிரமாணிக்கம், இறைபராமரிப்புக்கும் பணிவு என்பவற்றை மீண்டும் மனத்திரையில் நிழலாட விடுகின்றோம்.

கடந்த காலத்தின் இந்தக் கல்விக் கூடம் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. அதிற் குறிப்பிடத்தக்கதொரு நிகழ்வு , இதுவரை தனியே இயங்கி வந்த யாழ்.கன்னியர் மடம் மகா வித்தியாலம் 2002ம் ஆண்டு யா/திருக்குடும்ப கன்னியர் மடத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டமையாகும். அருகருகே அமைந்துள்ள இவ்விரு கத்தோலிக்க கல்விக்கூடங்களும் பல வருடங்களாகத் தனித்தனியாகவே இயங்கி வந்தன. இவற்றை ஒன்றிணைக்க வேண்டுமென்ற சிந்தனையும், நிறைவும், திருச்சபையினதும், திருக்குடும்ப சபையினதும், பொதுமக்களினதும் சிந்தனையில் இருந்தே வந்துள்ளதெனினும் இச்சிந்தனையை 2002 இல் தான் நிஜ உருப் பெற்றது.இவ்வொருங்கிணைப்பு சமூகத்திற்குப் பயன்தருவதும்,ஒரே குடும்பம் என்ற உணர்வை வளர்ப்பதாகவும் அமையும் என்பது எனது பூரண நம்பிக்கை.

நாட்டினதும்,குறிப்பாக யாழ் பிரதேசத்தினதும் வரலாற்றில். இக் கல்வி நிறுவனமானது, பல கஷ்டங்களையும் சவால்களையும் சந்தித்து வீறுநடை போட்டுள்ளது. உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பொறுப்புள்ள பணிகளையும் தலைமைப் பீடங்களையும் அலங்கரிக்கும் பெண்மணிகளை உருவாக்கி உவந்தளித்துள்ளது. வளமான எதிர்காலத்தை உருவாக்கி வந்துள்ள இச் செயற்பாட்டிற்தம் பங்களிப்பைச் செய்துள்ள அனைவரையும்நாம் நன்றி நிறைந்த நெஞ்சோடு நினைவு கூறுகின்றோம்.

"இறைவன் ஒருவருக்கே மகிமை" என்ற விருது மொழிக்கும்,அன்பு, ஐக்கியம், அமைதி அனைத்து மனித இனத்தையும் ஒரே குடும்பமாக இணைக்கும் எமது நோக்கிற்கும் ஏற்புடையதாக, இந்த நிறுவனம் தன் கொள்கைப்பாட்டில் உறுதியுடையதாக தலைநிமிர்ந்து நிற்பதோடு, தன்வழி செல்லும் அனைவருக்கும் அர்ப்பணத்துக்கும் சேவைக்குமான தொரு பாரம்பரியத்தை, விசுவாசத்துடன் கையளித்துக் கொண்டே வருகின்றது.

இந்தத் திருக்குடும்ப கல்வி நிறுவனம், தொடர்ந்தும்,திருச்சபைக்கும், சமூகத்திற்கும் தன் சேவையை வழங்கட்டும். இந்த 140 ம் வைபவமானது, புத்துணர்வுடனும் புதுப்பெலனும் அருளும் ஒன்றாக அமையட்டும் என வாழ்த்துகின்றேன்.